# முதல் இணையப் பாதுகாப்பு நிறுவனத் துவக்க மையம்

மின்னிலக்கப் பொருளியலில் கால்பதிக்க முயன்றுவரும் சிங்கப்பூர், அதன் முதல் இணையப் பாதுகாப்பு நிறுவனத் துவக்க மையத்தை திறக்கவிருக்கிறது.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு இம்மையம் நிதி வழங்கும்.

'புளோக் 71ல் புத்தாக்க இணையப் பாதுகாப்பு சூழல்' என்றழைக்கப்படும் புதிய மையம், இணையப் பாதுகாப்பு தொழில் முனைவர்களுக்காக அடுத்த மாதம் திறக்கப்படும்.

ஆயர் ராஜா கிரசெண்ட்டில் 'புளோக் 71' எனப் பிரியமாகவும் கூட்டாகவும் அழைக்கப்படும் தொழில்துறைக் கட்டடக் குழுமத்தில் மையம் அமைந்திருக்கும்.

இப்பகுதியில் தற்போது ஏறத்தாழ 700 தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடங்கப் பட்டுள்ளன.

ஆர்வமுள்ள தொழில் முனைவர்களின் தொழில் யோசனைகள் சாத்தியமானதாக இருப்பதையும் யோசனைகளை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான நிதியும் தொழில் அறிவும் அவர்களுக்கு இருப்பதையும் உறுதிப்படுத்துவது மையத்தின் நோக்கம்.

வெளிநாட்டுச் சந்தைகளில் விரிவடையவும் 'வென்ச்சர்' நிதி பெறவும் உதவி அளிக்கப்படும்.

தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையமும் சிங்கப்பூரின் இணையப் பாதுகாப்பு அமைப்பும் சிங்டெல், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து மையத்தைத் தொடங்குகின்றன. சிங்டெல்லின் 'இன்னோவ்8' நிறுவனப் பிரிவும் என்யுஎஸ் என்டர்பிரைசும் புளோக் 71ல் தற்போது அமைந்துள்ள இடத்தில் அமைந்திருக்கும்.

அடுத்த ஈராண்டுகளில் 100 தொழில்முனைவர்களையும் 40 புதிய நிறுவனங்களையும் உருவாக்க மையம் முயற்சி எடுக்கும். நேற்று நடைபெற்ற தொடர்பு, தகவல் அமைச்சின் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின்போது தொடர்புத் தகவல் அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் இவ்விவரத்தை அறிவித்தார்.

"துடிப்பான இணையப் பாதுகாப்பு சூழல் வலுவான தேசிய இணையப் பாதுகாப்புக்குப் பங்களிக்கும் முக்கிய காரணமாக திகழும்," என்றார் டாக்டர் யாக்கூப். திரு ஸாக்கி முகம்மது (சுவா சூ காங் குழுத்தொகுதி) கூறிய கருத்தை அவர் ஆமோதித்ததோடு, சிங்கப்பூரின் இணைப்புகள் இணையத் தாக்குதல்களுக்கு இலக்காகுவதாக திருவாட்டி சுன் சுவெலிங் (பாசிர் ரிஸ் - பொங்கோல் குழுத் தொகுதி) கூறிய கருத்துக்குப் பதிலளித்தார்.

இதற்கிடையே, இணையத் தாக்குதலுக்கு எதிரான ஆயுதப் பந்தயத்தில் முன்னிலையில் இருக்க புத்தாக்கமே முக்கிய வழி என நம்பும் இணையப் பாதுகாப்பு அமைப்பு, தேசிய பாதுகாப்புத் தேவைகளை நிறைவேற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க புதிய நிதியளிப்புத் திட்டத்தையும் அமலாக்கவிருக்கிறது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.